செய்தி வெளியீடு எண்: 163 நாள்: 21.02.2011.

## "தமிழ் இணையக் கல்விக் கழகம்" பிற பல்கலைக்கழகங்கள் போல் முழுமையான பல்கலைக் கழகமாக நிலை உயர்த்தப்படும்!

## முதலமைச்சர் கலைஞர் அறிவிப்பு!

1999ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் சென்னை மாநகரில் நடைபெற்ற உலகத் தமிழ் இணைய மாநாட்டில் அறிவிக்கப்பட்டதற்கேற்பத் தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 17.2.2001 அன்று "தமிழ் இணையப் பல்கலைக் கழகம்" (Tamil Virtual University) எனும் இணையக் கல்வி நிறுவனத்தைத் தொடங்கி வைத்தார்கள். பின்னர் இந்நிறுவனம், "தமிழ் இணையக் கல்விக் கழகம்" எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

உலகெங்குமுள்ள மக்களுக்குத் தமிழ் பயிலும் வாய்ப்பை அளிக்கும் இந்தத் தமிழ் இணையக் கல்விக் கழகம் ஒருங்கிணைந்த தமிழ் இளநிலைப் பட்டப் படிப்பினை இணையதளம் வாயிலாக வழங்கி வருகிறது. மேலும், இக்கல்விக் கழகம் தமிழ் முதுகலைப் பட்டப் படிப்பிற்கான பாடங்களையும் ஆய்வு செய்து உருவாக்கி வருகிறது. இணைய தளத்தில் வெளியிடப்பட்ட பாடங்கள் குறுந் தகடுகள் வடிவிலும் வழங்கப் படுகின்றன. தமிழ் இணையக் கல்விக் கழகம் தமிழ் மொழியின் இலக்கண இலக்கியங்களையும், தமிழ்மொழி வரலாறு, தமிழ்ப் பண்பாடு போன்றவைகளையும் பயில விரும்புவோரின் தேவைகளை நிறைவு செய்வதற்கு உதவும் வகையில் இந்நிறுவனம் பிற பல்கலைக் கழகங்களைப் போல முழுமையான பல்கலைக் கழகமாக நிலை உயர்த்தப்படுமென்றும், அதற்கெனச் சட்டம் இயற்றுவதற்குத் தேவைப்படும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் முதலமைச்சர் கலைஞர் இன்று (21–2–2011) அறிவித்துள்ளார்.

***

வெளியீடு: –

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை